2006 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 64, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

64—

அருங்காட்சியகம்

***19109—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை காதி கிராப்ட் அங்காடியின் மாடியில் உள்ள அண்ணல் காந்தியடிகள் அருங்காட்சியகம் பொதுமக்களும், மாணவர்களும் நாள்தோறும் கண்டு களிக்கும் வகையில் ஒரு மையமான இடத்திற்கு மாற்றப்படுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆளும் இல்லை. வினா எண் 65, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

65—

பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை

***30701—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பத்ரபல்லி, எருக்கம்பட்டு போன்ற கிராமங்களின் மைய பகுதியில் தக்காளி பழம், பப்பாளி பழம் போன்ற பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2006 ஜனவரி 21

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதர்மம் எங்கெல்லாம் தலை தூக்குகிறதோ அங்கெல்லாம் நான் அவதரிப்பேன் என்று சொன்ன கண்ணபிரான் போன்று, தமிழகத்து மக்கள் எங்கெல்லாம் துயரம் அடைகிறார்களோ அங்கெல்லாம் தானாக நேரில் சென்று, அவர்களின் குறைகளைத் தீர்த்து, நல்லாட்சி செய்து வரும் எங்களின் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி எனது வினாவைக் கேட்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது பேரணாம்பட்டு தொகுதியில் உள்ள பத்ரபல்லி, எருக்கம்பட்டு போன்ற கிராமங்களில் மையப் பகுதியில் தக்காளி மற்றும் பப்பாளி பழங்கள் அதிகமாக விளைகின்றன. அதனைச் சுற்றி மசிகம், மதனாபல்லி, சாரங்கல், மிட்டபல்லி, ஓனாங்குட்டை, கொத்தூர், பாலூர் போன்ற குக்கிராமங்களிலும் பப்பாளி பழம் மிகுதியாக விளைகின்றது. மிகக் குறைந்த விலைக்குப் பழங்கள் விற்கப்படுவதால் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அங்கு அமைக்கப்பட்டால் அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்தில் இதுவரை 12 தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பேர்ணாம்பட்டு தொகுதி பத்ரபல்லி மற்றும் எருக்கம்பட்டு போன்ற கிராமங்களின் மையப் பகுதியில் தக்காளி மற்றும் பப்பாளி பழம் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு தனியாரிடமிருந்து இதுவரை எந்த விண்ணப்பங்களும் வரப்பெறவில்லை. மேற்படி தொழில் தொடங்க வருகின்ற தொழில் முனைவோர்களுக்கு அனைத்து உதவிகளையும் மாவட்ட தொழில் மையம் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. இதுபோன்ற தொழில் முனைவோர் பழச்சாறு தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செல்வி சி. கனகதாரா.

2006 ஜனவரி 21]

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்ரபல்லி, எருக்கம்பட்டு போன்ற கிராமங்களில் பழங்கள் அதிகமாக விளைந்தபோதிலும் அப்பழங்களை மிகுதியாகப் பயன்படுத்த முடிவதில்லை. வெளி இடங்களுக்குக் கொண்டு செல்வது என்றாலும் ஏழை மக்களால் அதிகம் செலவிட வேண்டியுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பழங்களை கொள்முதல் செய்ய தொழிற்சாலை ஒன்றை அமைத்தால் அவர்களது வருமானம் நிலையாக இருக்கும். எனவே, சாதனை மேல் சாதனை புரிந்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய இனிய நல்லாட்சியில் பத்ரபல்லி மற்றும் எருக்கம்பட்டு போன்ற கிராமங்களில் தக்காளிப் பழம் மற்றும் பப்பாளிப் பழம் போன்ற பழங்களின் பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே முதலில் சொல்கிறபோதே பதிலளித்து இருக்கிறேன். யாராவது தொழில் தொடங்குவதற்கு முன்வருவார்களேயானால் அனைத்து உதவிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்யும் என்று நான் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே பேரணாம்பட்டு தொகுதியிலே 10 விண்ணப்பங்கள் வரப்பெற்று அதிலே இரண்டு விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு தொழிற்சாலை தொடங்கப்பட்டுவிட்டது. மீதி இருக்கக்கூடிய விண்ணப்பங்களிலே பழச்சாறு தயாரிக்க வேண்டுமென்று யாரும் கோரிக்கை தரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுபடியும் தொழில் முனைவோர்களை அணுகி, அரசுக்குத் தெரிவித்தால் உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாவட்ட தொழில் மையத்தால் பழச்சாறு தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை நிறுவுவதற்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 66, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.